**S.T.C No.77/2021**

**Dated: 25.03.2023**

**PW: 1**

**(Witness has been administered Oath U/s 3 of the Oaths Act 1969)**

| | |
|---|---|
| Name | : பாக்கியராஜ் |
| Father 's Name: | : டேனியல் |
| Address | : தாமஸ் நகர், இலுப்பையூரணி,கோவில்பட்டி |
| Age | : 33 |

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது. எனது புகாரிலோ, முதல் விசாரணையிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ எனது மாத வருமானத்தை பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதே போன்று தாவா கடன் எப்போது கொடுக்கப்பட்டது என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னுடைய புகாரில் குறிப்பிட்டுள்ள தேதியை எவ்வாறு கண்டறிந்தேன் என்றால் வீட்டிற்கு வந்ததும் எனக்கு தேதி நினைவு வந்ததால் புகாரில் அந்த தேதி குறிப்பிடப்பட்டுள்ளது. எப்போது அந்ததேதி நினைவுக்கு வந்தது என்றால் வழக்கறிஞர்அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பே கடன் எதிரிக்கு கொடுத்த தேதி எனக்கு நினைவுக்கு வந்துவிட்டது என்றால் சரிதான். அந்த விபரத்தினை என்னுடைய வழக்கறிஞரிடம் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ரூ,1,50,000/- எவ்வாறு தயார் என்னால் செய்து எதிரிக்.கு கொடுக்கப்பட்டது என்ற விபரத்தினை குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

ரூ,1,50,000/- தொகை என்பது என்னை பொறுத்தவரையில் பெரிய தொகை என்றால் சரிதான். அந்த கடன் தொகைக்கு வட்டி எதுவும் பேசப்படவில்லை. வட்டியில்லாமல் பெரியதொகை கடனாக கொடுப்பது வழக்கத்திலுள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் வருமானவரி தாக்கல் செய்து வருகிறேன். வருமானவரி எவ்வளவு தாக்கல் செய்துள்ளேன் என்ற விபரத்தினை ஆவணத்தை பார்த்தால் தான் கூற முடியும். 2021ல் வருடத்தில் என்னுடைய வருமானம் வரி எவ்வளவு தாக்கல் செய்துள்ளேன்

என்ற விபரம் ஆவணத்தை பார்த்தால் தான் கூற முடியும்.அந்த ஆவணம் என்னிடம் உ்ள்ளது. அந்த காலகட்டத்தில் வருமானவரி எவ்வளவு செலுத்தியுள்ளேன் என்றால் எனக்கு நினைவுஇல்லை ஆவணத்தை பார்த்தால் தான் கூற முடியும். அந்தவருமானவரி ஆவணத்தில் எதிரிக்கு கடனாக கொடுத்ததாக கூறப்படும் ரூ,1,50,000/-காட்டப்படவில்லை என்றால் சரிதான். அவ்வாறுஉண்மையில் எதிரிக்கு ரூ,1,50,000/- நான் கடனாக கொடுத்திருந்தால் அந்த தொகையினை அதனை வருமானவரிஆவணத்தில் காட்டியிருப்பேன் என்றால் சரியல்ல.

எதிரி கிராமநிர்வாக அலுவலராக கடந்த 20 வருடங்களாக பணிபுரிகிறார் என்ற விபரம் எனக்கு தெரியும். எதிரி மாத சம்பளம் ரூ,60,000/- என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எதிரிக்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்று எனக்கு தெரியாமலே அவருக்கு கடன் தொகை கொடுத்தேன் என்றால்சரியல்ல. எதிரிக்கு மாதசம்பளம் ரூ,50,000/- என்பது எனக்கு தெரியும். மாதம் ரூ,50,000/-பெறும் எதிரிக்கு என்னிடம் கடன் தொகை பெறஅவசியம் இல்லை என்றால் சரியல்ல. அவசர தேவைக்காக எதிரி என்னிடம் கடன் பெற்றார். என்னுடைய கார்களை வாடகைக்கு எடுத்துசெல்வதன் மூலமாக எதிரி எனக்கு பழக்கம் என்று கூறியதற்கு டிரிப் சீட் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் . ரூ,1,50,000/-எதிரிக்கு கடனாக கொடுத்தற்கு எழுத்துபூர்வமான ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான்.

எந்தவித ஆதாரமும் இல்லாமல் எதிரிக்கு கடனாக ரூ1,50,000/- நான் கொடுத்ததாக கூறுவது நம்பும்படியாக இல்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு என்றால் சரிதான்.அது **எ.சா.ஆ. 1** ஆகும். அந்த வழக்கறிஞர் அறிவிப்பில் தேதி 06.11.2021 என்று தேதி இடப்பட்டுள்ளது. பின்னால் வழக்கறிஞர் கையெழுத்து அருகில் 06.11.2021 என்று தேதியிடப்பட்டுள்ளது. வழக்கறிஞர்

கையெழுத்திற்கு அருகில் தேதியில் திருத்தம் செய்யபட்டுள்ளது என்றால் எனக்கு அவ்வாறு திருத்தம் செய்யபபட்டதாக தெரியவில்லை. இவ்வழக்கில் எனது தரப்பு ஆவணமாக பு.சா.ஆ.4 தாக்கல் செய்துள்ள வழக்கறிஞர்அறிவிப்பில் 08.11.2021 என்று தேதியிடப்பட்டுள்ளது அதன் பின்பக்கத்தில் வழக்கறிஞர் கையொப்பத்திற்கு அருகில் தேதிஎதுவும் இடப்படவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பான எ.சா.ஆ.1ன் நகலினை இந்நீதிமன்றத்தில்தாக்கல் செய்யவில்லை என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

இவ்வழக்கில் பு.சா.ஆ.4 ஆவணமானது எதிரிக்கு அனுப்பபடவில்லை என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கில் எதிரிக்கு எந்த வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது எதனை எதிரி பெற்றுகொண்டார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பு.சா.ஆ.5 அஞ்சலக ஒப்புதல் அட்டையில் தேதி எதுவும் குறிப்பிடப்பட்டு எதிரி பெற்றுகொண்டதாக குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் வழக்கறிஞர் அறிவிப்பினை எதிரி எப்போது பெற்றுகொண்டார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரிக்கு அனுப்பிய எ.சா.ஆ.1 வழக்கறிஞர் அறிவிப்பில் காசோலை தொகையினை 7 நாட்களுக்குள் செலுத்தவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எ.சா.ஆ 1 சட்டப்படியான வழக்கறிஞர் அறிவிப்பு கிடையாது என்றாலும் அதன் அடிப்படையில் புகார் தாக்கல் செய்வதற்கு எவ்வித வழக்கு மூலமும் எளாது என்றால் சரியல்ல. என்னுடைய புகாரிலும் வழக்கு மூலத்தை அந்த 7 நாட்களை கணக்கீடு செய்து தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். காசோலையிலுள்ள எழுதப்பட்டது என்னுடைய கையெழுத்து என்றால் சரியல்ல. காசோலையிலுள்ள தேதியும் என்னுடைய பெயரும் மற்றும் இதர விபரங்களும் வெவ்வேறு மையினால்எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

காசோலையில் எழுத்தால் எழுதப்பட்டுள்ள தொகை ரூபாய் ஒரு இலட்சத்து பதினைந்து ஆயிரம் என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பு.சா.ஆ.1 சட்டப்படி செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. என்னுடைய புகார் மனுவில் உறுதி மொழி ஆவணத்தில் 10.12.2021 என்று தேதியிடப்பட்டுள்ளது என்றாலும் அது விளாத்திகுளத்தில் வைத்து கையொப்பம் செய்யபட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரி வழக்கறிஞர் அறிவிப்பினை பெற்றுகொண்டவுடன் கோவில்பட்டி தாசில்தார் என்னை அழைத்து தீட்டினாரா என்றாலும் நான் தாசில்தாரரிடம் வழக்கு தாக்கல் செய்யமாட்டேன் என்று உறுதிமொழி கொடுத்ததால் எதிரி வழக்கறிஞர் அறிவிப்பினை அனுப்பவில்லை என்றாலும் நான் சாட்சியம் அளிப்பது கூறிய தேதியில் நேரத்தில இடத்தில் எதிரி என்னிடம் எவ்வித கடன் தொகையும் பெறவில்லை என்றாலு்ம அதற்கு ஆதரவாக எந்த காசோலையும் கொடுக்கவில்லை என்றாலு்ம வழக்கு காசோலை சட்டப்படியான கடப்பாட்டிற்கு கொடுக்கப்படவில்லை என்றாலும் வழக்கு காசோலை சட்டப்படி செல்லதக்கதல்ல என்றாலும் எதிரிக்கு வேண்டாத யாரோ ஒரு நபரிடமிருந்து எதிரியின் காசோலையினை முறைகேடாக பெற்று பொய்யாக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை.</u>**

Taken before me in open court, read over to the
witness and admitted by the deponent to be Correct.

Sd/-Thiru.A. Mohammed Sadiq Hussain.,
Judicial Magistrate,
Fast Track Court(Magisterial Level),
Kovilpatti